உ

சிவமயம்



மூளாயைச் சேர்ந்தவரும்

கிளிநொச்சி / முல்லைத்திவு மாவட்டங்களின்

கல்வித்திணைக்களங்களின் கணக்காளரும் ஆகிய

# உயர்திரு K. K. பரமசாமி

அவர்களின்

# நினைவு மலர்

09-07-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



# திரு K. K. பரமசாமி அவர்கள்

(கணக்காளர், கிளிநொச்சி / முல்லைத்தீவு கல்வித் திணைக்களம்)

தோற்றம்:
1936-11-12

மறைவு
1985-06-09

## திதி நிர்ணயப் பாடல்

கோயில் கணக்காளர் சேர்ந்த திதியதுவாம்
குரோதன வைகாசி இருபத்தேழு – குற்றமிலா
நற் சதய மபர பக்கச் சப்தமியா மன்று
நற் கதியா மன்னரவர்க்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

காரைநகர் விக்காவில் தந்த சீர்மிகு குடும்பம் தன்னில் திருவாளர் கா. கந்தையா அவர்களுக்கும் மீனாட்சி அம்மையார் அவர்களுக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தவர் பரமனடி சேர்ந்த பரமசாமி அவர்கள். ஈன்றபொழுதில் பெரிதுவந்த தாயார் இவரைச் செல்லமாகச் சீராட்டிப் பாராட்டினார், காரணம் மூன்று அக்காள் மாருக்கு உதவியாக வந்தாரே என்றும், அருமைக்கு ஓர் ஆண் என்றும் அல்லும் பகலும் சிதம்பரேஸ்வரரையும் சிவகாமித் தாயையும் சுகம் வேண்டிப் பிரார்த்தித்தார், இவர் மேலும் அருமையாக இருக்க இவருக்கு ஓர் தம்பியும் நான்கு தங்கைகளும் பிறந்தார்கள். எழு பெண் சகோதரிகளுடனும் ஒரு நம்பியுடனும் பிறந்த இவரைத் தந்தையார் கல்வி கற்க உரிய இடங்களில் சேர்த்தார், ஆரம்பக் கல்வியை காரை/மெய்கண்டான் வித்தியாசாலையிலும் அதன் பின் காரை/இந்துக் கல்லூரியிலும் கல்வியைக் கசடறக் கற்றார். விளையும் பயிரை முளையிலே தெரிவது போல ஆங்கில மொழி மூலம் சி. பா. த. பரீட்சையில் விசேட சித்திகளுடன் பெறுபேறு கண்டார். மேற் கல்வியைத் தொடரக் குடும்பப் பொருளாதாரம் அனுமதிக்கவில்லை. வேலை தேடுபடலம் என்பார்கள் அதன்படி உத்தியோகம் தேடும் முயற்சியில் தந்தையார் ஈடுபட்டார்.

வழிகாட்டிகள் பலரைத் தேடினார். மூன்று சந்தர்ப்பங்கள் ஒன்றாய்க் கிடைத்தன. ஆசிரிய பயிற்சிக்குச் செல்வதா, வங்கிக் காசாளராகச் செல்வதா எழுதுவினைஞராகச் செல்வதா இம் மூன்றும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காது மும்முனைப் போராட்டத்தை கொடுத்தன. கல்விக் குருவின் ஆலோசனைப்படி

"படிக்கக் கூடியவர் முன்னேற்றம்

காணக் கூடியவர் ஆகையால், எழுதுவினைஞராக்குங்கள் என்றதற்கேற்ப எழுதுவினைஞரானார். முதன் முதலில் ஹட்டனில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சேர்ந்தார், அடுத்து குடிசன மதிப்பு புள்ளிவிபர இலாகா, கல்வி இலாகா, அரசாங்க விநியோக திணைக்களம் ஆகியவைகளில் கடமையாற்றினார் குடிசன மதிப்பு புள்ளிவிபர இலாகாவில் கடமையாற்றும் பொழுது இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபட எண்ணினார். தொல்புரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு அரியகுட்டி அவர்களின் திருமகள் சுகிர்தமலர் ஆசிரியை அவர்களை 1960ம் ஆண்டு திருமணம் செய்தார். ஒருமித்து வாழ்வதே வாழ்க்கைச் சிறப்பு என்பார்கள். அதன்படி தலைநகராம் கொழும்பு மாநகரில் சிறப்புடன் விருந்தோம்பி வீற்றிருந்தனர். 1966ம் வருடம் பதவியுயர்வுபெற்று வவுனியாவில் உள்ள கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றினர். இவர் தம் திறமைகண்டு திணைக்களத்தினர் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் கொடுத்தனர். "சுற்றத்தவரை பற்றியிரு" எனபதற்கேற்ப பிறந்த ஊருக்கும் புகுந்த ஊருக்கும் இடையில் மூளாயில் புதுமனை அமைத்துப் பொலிவுடன் வாழ்ந்து வரலாயினர்.

விளையும் பயிர் விளையவே செய்தது குருவின் ஆசி கிட்டியது. பதவி உயர்வுகள் படிப்பின் காரணத்தால் கிடைக்கவே செய்தன. 1961ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் இல்லறப் பேரும் புத்திரப் பேறு கிடைத்தது. புத்திரி செல்வி வசந்தகுமாரி பிறந்தார். அதன்பின் 1967ல் செல்வி கமலகுமாரியும 1972ம் ஆண்டு சந்ததிக்கோர் வித்தான விஜேந்திரனையும் பெற்றனர்.

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" எனப் பெரியோர் வாழ்த்த வாழ்ந்த செம்மல மூளாய் சித்தி விநாயகரையும், பொன்னாலைக் கிருஷ்ணனையும் பணிவார். குல தெய்வமாம் கண்ணனைக் காலமெலாம் கைதொழுதார்.

அன்னை தந்தையரில் அளவிலாப் பற்றுடையவர். அவர்களின் இறுதிக் காலத்தில் உடனிருந்து உதவிபவர், தந்தை உடல்தளர்ந்து இருந்தபோது மூக்காலமும் உணர்ந்து செயலாற்றிபவர், பொறுமைசாலி. தந்தையாரை இழந்த வேளையிலே தாயாரைத் தன்னுடன் அழைத்து வந்து தாயாரிக்கு உரிய சேவைகளை செவ்வனே செய்துவந்தார். தான்மட்டும் அன்றித்தன் தம்பியும் பங்கு கொள்ளச் செய்தவர். தாயாரும் தளர்ந்து தந்தை சென்ற வழி சென்றார்கள். தந்தையார் சென்ற ஒரு வருடத்துள் தாயார் செல்ல தாயார் சென்ற எழு மாதத்தில் தானும் செல்லவேண்டும் என்று இன்று எம்மையெல்லாம் விட்டு எங்கு சென்றாரோ யாமறியோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்தவர்

காலஞ்சென்ற திரு. கே. கே. பரமசாமி கணக்காளர் அவர்களுடன் கடந்த ஐந்து ஆண்டுகளாக நான் பழகியுள்ளேன். யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் அவரோடு ஈராண்டுகள் நெருங்கிப் பழகும் சூழ்நிலை அமைந்தது.

எப்பொழுதும் அவர் இன்முகத்துடன் எல்லோருடனும் பழகும் வழக்கம் உள்ளவராகவும், சிறந்த பண்பாளராகவும், அன்பு செலுத்துபவராகவும், உண்மையும் நேர்மையும் கண்ணியமும் உடையவராகவும் திகழ்ந்தார். எவருடைய வெறுப்பையும் அவர் சம்பாதிக்கவில்லை வெப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகினாலும்கூட வெறுப்பைக் களைந்து அன்பைப் பெறக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார்.

1984ல் கணக்காளராக நியமனம்பெற்ற அவர் அதற்கு முன்பு ஈராண்டுகளாக என்னுடன் நிதி உதவியாளராகப் பணிபுரிந்தார். முதலில் களஞ்சியக் கிளையிலும், பின்னர் நிதிக் கிளையிலும், ஈற்றில் சம்பளக் கிளையிலும் பொறுப்பேற்றிருந்த அவர் கடமைக்கே தன்னை அர்ப்பணித்து சிலவேளைகளில் வீட்டையும் மறந்து செயற்பட்டு வந்தார் என்பது போற்றற்குரியது தனது கிளைகளை ஆகக்கூடிய பயனை பெறத் தக்கவிதத்தில் ஒருங்கமைத்து தனது உதவியாளர்களை ஊக்குவித்து திறம்பட வேலைசெய்வதற்கு காரண கர்த்தாவாக இருந்தார் உதவியாளர்களுடைய வெறுப்பற்ற ஒத்துழைப்பையும் தன் உணர்வான ஊக்கத்தையும் பெறுவதில் வல்லவராக இருந்தார் கடந்த ஆண்டுகளில் நிலுவையாக இருந்த வேலைகளில் பெரும்பான்மையானவற்றை செய்து முடித்தார்

அலுவலக வேலைப் பளுவுடனும், வீட்டுத் தொல்லைகளுடனும் கூட அவர் கணக்கியலை நன்கு படித்து கணக்காளராக நியமனம்பெற்ற அதே வேளையில் ஐ. சீ. எம். ஏ. தேர்வுகளில் III பகுதிகளிலும் சித்தி எய்தியமை புகழ்ச்சிக்குரியதாகும்.

சிறந்த ஒரு கணக்காளராக நியமனம் பெற்ற அவரது சேவை அவர் நியமனம்பெற்ற ஓராண்டிக்குள் சடுதியாக முடிவுற்றமை முல்லைத்தீவு, கிளிநொச்சிக் கல்வித் திணைக்களங்களுக்கும் கணக்காளர் சேவைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

வ. யோசப்
கணக்காளர்,
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையும் கண்ணியமும் ஒருங்கே அமைந்தவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற சான்றோர் வாக்கிற்கிணங்கத் தோன்றியவர் அன்பர் பரமசாமி. காரைநகரில் பிறந்து மூளாய்ப்பகுதியில் புகுந்தவரான அன்பர் சீரும் சிறப்போடும் வாழ்ந்தார்.

கல்வி கேள்விகளில் வல்லவராகிக் கல்வி இலாகாவில் கடமையாற்றி, கணக்காளர் (அக்கவுண்டன்) எனும் உயர் பதவி வகித்து அளவிலா அன்பர்களைத் தன் வச மாக்கிக் கடமை கண்ணியத்தில் உயர்ந்து நின்றார். எடுத்த எந்தவொரு விடயத்தையும் எளிதில் முடிக்கும் ஆற்றல் பெற்றவர்.

செயற்கரிய செய்வர் பெரியர் எனும் பொன்மொழிக்கிணங்க கல்விக்கந்தோரில் கடமையாற்றுங் காலத்தில் அவரது நிர்வாகத்திறமை ஒழுங்குமுறை, ஆக்கத்திறன் என்பவற்றையும் சம்பளவிடயத்தில் சாதுர்யமாகக் காட்டும் செயற்பாடுகளையும் யான் கேட்டும் பார்த்தும் மகிழ்ந்ததுண்டு.

இத்தகைய சிறப்புகள் பல பெற்ற பெருந்தகையொருவரைக் கல்வி இலாகா ஏன் கல்வி உலகேயிழந்தது – கவலையைத்தருகிறது. விதியெனும் விளையாட்டில் விரைவாக எமையெல்லாம் விட்டுப்பிரிந்தது வேதனையைத் தருகிறது அன்பர் பரமசாமியின் இழப்பால் வாடும் குடும்பத்தவர்களுக்கும் அவரது அன்பர்களுக்கும் இறைவன் ஆறுதல் அளிப்பானாகுக.

வணக்கம்

இங்ஙனம்
ப. சண்முகராசா
B. Sc Dip in Ed.
வட்டுக்கோட்டை
வட்டாரக் கல்வி அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறப்பதில்லை

அமரர் கந்தையா பரமசாமி அவர்களை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். அவர் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் எழுதுநராகப் பணியாற்றிய காலத்தில் அவருடன் கூடப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, போன்ற நற்பண்புகளைக் கடைப்பிடித்தார். அதேசமயம் சகலருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவமுடையவர். எவரது மனமும் நோகாது நடக்கும் உத்தமர்.

அமரர் பரமசாமி அவர்கள் ஒரு திறமைமிக்க எழுதுநராக விளங்கினார். தமது அயராத முயற்சியினால் கணக்காளராகப் பதவியுயர்வுபெற்று ஒரு சிறந்த கணக்காளராகத் திகழ்ந்தார். அவரின் செயற் திறமையை நன்கறிந்த கல்வி அமைச்சு அதிகாரிகள் அவரை முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இரண்டு பிரதேசக் கல்வித்திணைக் களங்களுக்கும் பொறுப்பான கணக்காளராக நியமித்து, அவரின் திறமைக்கு உரிய மதிப்பளித்தனர். அவர் கணக்காளராகக் கடமையாற்றிய போது தம் கீழ் பணியாற்றிய உத்தியோகத்தர்களைத் தமது உடன்பிறப்புக்களாக மதித்து, அன்புடன் வழிநடத்தி அவர்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றார். சக உத்தியோகத்தர்களின் அன்பை மட்டுமன்றி ஆசிரியர் சமுதாயத்தின் அன்பையும் பாராட்டுக்களையும் பெற்றவராகத் திகழ்ந்தார்.

அவர் ஒரு சிறந்த அரசாங்க உத்தியோகத்தர் மட்டுமன்றி சிறந்த குடும்பத்தலைவருமாவார். அவரின் திடீர்மறைவு அரசாங்க சேவைக்கு மட்டுமல்லாது அன்னாரின் குடும்பத்தினருக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

பொன்னாலை
சுழிபுரம்.
25-06-1985.

கா. சந்திரராசா
நிர்வாக அதிகாரி
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தும் இறவாத இனியோன்

இறப்பு என்பது எவராலும் தவிர்க்கமுடியாத ஒரு நியதி எனினும் இந்த நியதிக்குப் புறம்பாக, இறந்தும் இறவாது வாழும் இனியோர் பலரை நாம் இன்றும் காணுமலில்லை.

இந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர். கிளிநொச்சி முல்லைத்தீவுக் கல்வித்திணைக்களங்களில் கணக்காளராய்க் கடமை புரிந்து அண்மையில் பரமனடி சேர்ந்த பெரியார் கே. பரமசாமி அவர்கள்.

யாழ் கல்வித்திணைக்களத்தில் 1970 முதல் 1974 வரை எழுதுவினைஞராகப் பதவி வகித்த இவர்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர்"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கமைய இடைவிடாது முயற்று 1983ல் நிதி உதவியாளராய் (FA) இருந்து கணக்காளராகவும் உயர்வு பெற்றார்.

தமது அனுபவத்தோடு கூடிய அறிவினாலும் இனிய செய்கையினாலும் உயர்ந்த பண்புடைமையாலும் மேலதிகாரிகளிடத்தும் சக ஊழியர்களிடத்தும் அன்றி பழகிய அனைவரிடத்துமே நன்மதிப்பைப்பெற்ற நல்லோன் ஆவர்.

அவர் மறைவினால் வாடும் மனைவியார்க்கும் மக்களுக்கும் உறவினர்களுக்கும் எம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று பரமசாமி அவர்கள் எம்மிடை இல்லை. ஆனால் அவருடைய இனிய செயல்களும் தூயசிந்தனைகளும் என்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்.

"மனிதன் எவ்வாறு நைந்துபோன துணிகளை எறிந்துவிட்டு வேறு புதியவற்றை எடுத்துக்கொள்ளுகிறானோ அவ்வாறே உடலில் உறைபவன் (ஆத்மா) நைந்து போன உடலங்களைவிட்டு வேறு புதியவற்றை அடைகின்றோன்"

- ஸ்ரீமத் பகவத் கீதை.

சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்
கா. பாலரத்தினம்
பதவி உதவியாளர்,
யாழ் கல்வித்திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பூஷணம்
க. கணபதிப்பிள்ளை
வட்டாரக் கல்வி அதிகாரி ( சங்கீதம் )
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பொன்னாலை,
சுழிபுரம்.

# மனிதருள் மாணிக்கம்

அமரர் மதிப்பிற்குரிய அன்பர் திரு க. பரமசாமி அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அன்று காலை பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமானை வணங்கிவிட்டு வீடுவந்தவர் மத்தியானம் இறந்து விட்டார் என்றால் எல்லாம் ஆண்டவன் செயலே என்பது தான் உண்மை.

இவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொன்னாலைக்கு வந்து அமைதியாக இறைவழிபாட்டிலீடுபடுவார் அயராது தன் சகல கடமைகளையும் உணர்ச்சியோடு செய்துவந்தார் என்பது நான் அவருடன் பழகிய 20 வருடங்களாக அறிந்த இனிய செயல்களாகும்.

இவருக்குக்கிடைத்த பதவி உயர்விலும் சலியாது ஓயாது பாடுபட்டுவந்த பெருமகனார் இயற்கை யெய்தியது எமக்குப்பெருங் கவலையையளிக்கிறது. எனினும இறைவன் திருவுளச் செயலால் வருத்தமென ஒன்றை அனுபவிக்காது தான் பெற்ற புண்ணியச் செயலின் பிரதியுபகாரத்தைப் பெற்றுக் கொண்டாரென ஆறுதலடைவோமாக.

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரது குடும்பத்தினரையும் ஆறுதலடைய ஆண்டவன் அருள்புரிவாராக.

இங்ஙனம்
க. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய முயற்சியால் உயர்ந்தவர்

உயர்ந்து நிமிர்ந்த தோற்றம் எடுப்பான மூக்கு, உள்ளத்தில் உவகை பூரள வாயில் மலரும் புன்முறுவல். இனிமை கனியும் இரத்தினச் சுருக்கமான பேச்சு, அளந்து அடி எடுத்து வைப்பது போன்ற ஒழுங்கு நடை பார்ப்பவர் உள்ளத்தை ஊடுருவிப்பாயும் கண்ணொளி. அமரர் கந்தையா பரமசாமியின் அன்புத்தோற்றத்தின் அம்சங்கள் வசீகரமானவை.

உற்றார், உறவினர், பழகியவர் பார்த்தவர் எவரையும் கவர்ந்து வாழ்ந்த அமரர் பரமசாமி அவர்கள் ஒரு லட்சிய புருஷர். மக்கள் சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டி. நல்லன பல பேசி எதிர்வழி நடப்பவர் போலன்றி சொல்லும் செயலும் ஒருங்கமைந்த நன்னெறியிற் செயற்பட்ட உத்தமர். அவரை நினைவு கூருவது அவரின் வாழ்க்கை வரலாற்றை திருப்பிப்பார்ப்பது வளரும் இளைஞ சமுதாயத்திற்கு ஒரு மங்காத கலங்கரை விளக்கமாக அமையும்.

வரலாற்றுப் பெருமையும மாண்புடை மாபுச்சிறப்பும் கொண்ட குடும்பத்தில் காரையம்பதியில் தோன்றிய இவர் இளமையில் அருகே யமைந்த மெய்கண்டான் சைவப்பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்தார். கல்வியில் ஆர்வமும கிரகித்தற்சக்தியிற் காட்டிய துடிப்பும் இவரின் எதிர்காலத்தை சுட்டிக் காட்டின. ஆரம்பக் கல்வி போதித்தோரின் பாராட்டும் சகமாணவரின் நன்மதிப்பும் இவரை இன்னும கல்விகற்கவும கல்லூரியிற் சேரவும் வழிகாட்டின.

இவர் கரை இந்துக் கல்லூரியிற் சேர்ந்தனர் பள்ளிப்பருவத்தில் கல்வியே தனது இலக்கெண்பதை இளம் பராயத்தில் உணர்ந்தவர் கல்வியொன்றைறக்கவி மற்றவையெல்லாம் தெரிந்த மாணவரைப்போலன்றி தாய் தந்தையர் தருகின்ற, உண்டி, உடை உறைவிடம் என்பவற்றை சிந்தித்து அுக அள்ளிச் செலவளிக்கின்ற கல்விப்பணி நிதியை மனதில வைத்து "மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்ற வள்ளுவன் அறவழிக்கமைய கல்வியில் தந்தையையும் புகழக்கூடிய அளவுக்கு S. S C யில் சித்தியடைந்தனர். இன்னும் மேற்படிப்பிற்கு வெளியிற்சென்று படிப்பதற்கு பணமும், வேறு வசதிகளும் இல்லாமையினல் கல்லூரிப்படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் அபாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலில்லை ஏற்பட்டது. உத்தியோகம்! சிறந்த விவேகிக்கும் திறமை யுடன் சித்தியடைந்த ஒருவருக்கும் உத்தியோகம் புறக்கணிக்கப் படாது வழங்கப்பட்டகாலம். அமரர் பரமசாமி எழுதுவினைஞர் சேவையில் நியமனம் பெற்றார்.

கடமை உணர்ச்சியும் சேவைமனப்பான்மையும் கொண்ட இவர் மக்கள் சேவை மகேசன் சேவையென தனது கடமை யைச் செய்து மக்களதும் மேலதிகாரிகளினதும் பாராட்டை பெற் றனர். சேவையில் இருக்கும்போது படித்தது போதும் என்ற எண்ணங்கொண்டிலேயாது தொழில் உயர்ச்சிக்கேற்ற கல்வியை நாடினர். ஒரு தேகத்தின் அவயவம் ஒவ்வொன்றும் தத்தம் கட மையைச் சரிவரச் செய்யுமானல் தேகம் சுக பெலனுடையதாய் நடமாடும் என்னும் அரியகருத்துடையவர் அரசசேவையை அரச பணியாளர் செவ்வனே செய்வாராயின் அரசு வலுவுடையதாய் இயங்கும். பணியாளரும் உயர்த்தப்படுவார்கள். அமரர் பரமசாமி சுயமுயற்சியால் உயர்ந்தவர் கல்வி கரையில என்பதை அனுபவத் தில் கண்டறிந்தவர். இலிகிதராய் பதவியுயர்வு பெற்ற இவர் மேலுங்கற்றனர். கணக்காளர் பரீட்சையில் தேறி கணக்காளராக கடமையாற்றி வந்தனர். இவரின் சேவை அப்பழுக்கற்ற தர்மவழி சார்ந்தது கல்வித் திணைக்களம் இவரது சேவையைப் பாராட்டிய வண்ணம் இருந்தனுன்று தர்மதேவதை இவரின் சேவை தன் நாட் டிற்கும் தேவையென்று எண்ணி எம்மிடமிருந்து அவரைப் பிரித்து விட்டது.

அவரின் அன்புப்பத்தினி சுகிர்தமலரையும் பாசமுடைய மக்கள் வசந்தகுமாரி, கமலகுமாரி, விஜேந்திராவையும் தவிக்கவிட்டு விண்ணு லகு எய்தினர். உறவினர், நண்பர், ஊர்மக்கள் நினைத்துப்புலம்ப பிரிந்துவிட்டனர் ஆனல் அவரது வாழ்க்கை நெறி இவர்களிற்கு விட்டுச்சென்ற புதுசமாகும்.

அன்னரது ஆத்மா சாந்தியடைவதாக

சாந்தி

வட்டுக்கோட்டை,
5-7-85.

சி. வைரமுத்து J. P.
கொத்தாரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிப்பாடல்கள்

## தேவாரம்

மனமெனும் தோணி பற்றி
மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும் போ தறிய வொண்ணா
துனை யுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே.

## திருவாசகம்

சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால் கொள்வெள் நீற்றாய்
பங்கயத்து அயனும், மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்கு ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

# கந்தரநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

# தேற்றம்

ஒரு போதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க
உனக்கென்ன குறை - மகனே
சிறுவன் தொட்டிலே ஒரு செல்லப்பிள்ளை போல்
பார்த்த உரிய தந்தை உனக்கு
உயிரோடிருப்பார் என்றும் - ஒரு போது
நாரைக்கு முத்தி தந்து கரிக்குருவிக்கு
உபதேசித்து ஏனக் குருளைகளின்
இன்னலைத் துடைத்தவர் - ஒரு

# நன்றி

எங்கள் குடும்பத்தலைவரின் பிரிவுகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி துக்கம் பகிர்ந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியம் முதலிய கிரியைகள் சிறப்புற நடத்த உதவியவர்களுக்கும் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்தியடைய பிரார்த்தித்த உற்றார் உறவினர் நண்பர்கள் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தினர் அனைவர்க்கும் எமது மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

திருமொழி அச்சகம், சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்கள்

## மனைவி

பக்கத் துணையிழந்தேன் — நான்
பாரச் சுமையானேன்
திக்குத் திசையெல்லாம் — நான்
தேடுகிறேன் தேடுகிறேன்.

முற்றம் வெளியாச்சோ — என்
முன்னங்கால் பின்னாச்சோ
பச்சைப் பசுமை எல்லாம் — இனிப்
பாழாச்சோ பாழாச்சோ.

என்னைத் தேடியவருக்கு — நான்
கஞ்சி பருக்கவில்லை
கையால் பிடிக்கவில்லை
நெஞ்சம் பதறியல்லோ
நின்று தடுமாறுகிறேன்.

## மக்கள்

பப்பாவோ பப்பா பார்புகழ்ந்த உங்களை
விட்டுவிட்டு ஏங்கி எப்படித்தான் இங்கிருப்போம்
இப்போதே வந்து இங்கிருக்க என்று
அக்காலனிடம் சொல்லி வாருங்கோ பப்பா

தங்கச்சி என்று தவறாது கூப்பிட்டீர்
எங்குற்றீர் என்று இடமெல்லாம் தேடினேன்
தங்குதற்கு வீடு இங்கில்லை என்றோநீர்
பங்குற்றீர் பரமன் பதம்.

அல்லும் பகலும் எமை அன்பாய் வளர்த்ததெலாம்
என்பும் கரையத்தான் அழுவதற்கோ – எங்கள்
அருமந்த பப்பாவை ஏன்தான் பிடித்தானோ
எருமை மேல் வந்து எமன்.

## சகோதரன்

அண்ணரோ அண்ணர் என்பேன்
அருமைக்கோர் அண்ணன் என்பேன்
விட்டுப் பிரிந்தீரோ எனக்கு
வேதனையைத் தந்தீரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள்

ஐயையோ என்றழுது ஆறாது கலங்குகிறோம்
ஐயா! பெரியவா ஆனதென்ன? ஆனதென்ன?
எங்கே போய்ச் சேர்ந்தீர் இறைவனடி சேர்ந்தீரோ
பஞ்சாய்ப் பறந்தீரோ பரமனடி சேர்ந்தீரோ.

எம் உடன் பிறப்பே – நீ
அள்ளிக் கொடுக்கா விட்டாலும் – நீ
அருகிருக்கக் கிட்டவில்லை – நீ
கிள்ளிக் கொடுக்காவிட்டாலும் – நீ
கிட்ட இருக்கவில்லை.

## மைத்துனர்கள்

கேட்டவர் கதறி ஏங்க கிடங்கினில் காலன் வந்து
கட்டியே கைக்கொண்டானே கலங்கினோம் கண்ணா உன்னைக்
காலையிற் கைதொழுத கண்மணி எங்கள் அத்தான்
மாலையில் எங்கே போனார் மாயனடி சேர்ந்தாரோ.

என்னுடல் பாதியன்னை ஏற்றமாய்த் தந்த அக்கா
எப்படிப் பிரிவையேற்றாள் ஏங்கியே கதறுகிறேன்
கேட்டதும் உடனே சேரச் சிறகுகள் இல்லை அத்தான்
பார்க்கவும் கிட்டவில்லை பதட்டமும் தீரவில்லை

பெரியவன் பெரியவன்தான் பேருக்கும் புகழ்தமக்கும்
அரியவனாகி மண்ணில் அடைந்தனன் ஆத்மசாந்தி
இருந்ததை எங்கிக்கண்ணீர் விடுஎன அறைவன் விட்டான்
விடுகின்றோம் கண்ணீர் ஆறாய் விடுகின்றோம் விடுகின்றோமே.

## மருமக்கள்

கைக்கெட்டிய கரும்பு கண்தெரியாத் தூரத்தில்
தள்ளிப் பறந்ததையோ துன்பத்தைத் துடைத்திடுமோ
நோயிற் தளராமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பரமனடி சேர்ந்தீரோ

## பெருமக்கள்

அருமையாய்ச் சீனிஐயா என்றினி அழைப்பதாரை
பெருமையாய்ப் போற்றினோமே பொறுத்ததோ பூமிஈதை
ஆறாய்ப் பெருக்குகின்றோம் அழுதழுது கண்ணீரை
ஆறாத் துயரத்தை அடக்கஇனி யாருளரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமியார்

பட்டமரம் நானிருக்கப் பச்சைமரம் போனதையோ
கெட்டகணுக் காணவில்லை சேடுவந்து சேர்ந்ததையோ
தாலி பறிகொடுத்தோ தனியாகித் தான்நிற்க
சீர்குலைந்து நிற்கும் என் சின்னமகள் தேறுளோ.

## உற்றார்

ஊருக்கு உதவுதற்கு உபகாரி என்றிருந்தோம்
பெற்ற மகன் போலப் பெருதமகன் என்றிருந்தோம்
பெயருக்கு ஏற்ற பரமசாமி என்று சொல்லி
போற்றினோம் பொன்போல பொழுதெல்லாம் காத்திருந்தோம்
காத்திருந்த எம்மைக் கலங்கவைத்தீர் காரணமென்.

## நண்பர்

உத்தியோகந்தன்னில் உயர்பதவி தான் வகித்து
மெத்த உறுதுணையாய் இங்கிருந்து நித்தமெமக்
கின்ப மொழி பகர்ந்த தெம் நண்ப நாமமது
பொன்னுடலம் காண்பதிப் பூவுலகில் எப்போது.

இலங்கைக் கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர்

# திரு E. L. விஜயமான அவர்களின்

# அனுதாபச் செய்தி

அம்மணி,

நான் மிகவும் மனவேதனையுடன் இக்கடிதத்தை எழுதுகின்றேன். நான் உங்களது கணவரின் மரணத்தைப் பற்றி, நடைபெற்று இரு கிழமைகளின் பின்பே கேள்விப்பட்டேன். இதைக் கேள்விப்பட்டதும் தாங்கொணு கவலையடைந்தேன். தயவு செய்து எனது ஆழ்ந்த அனுதாபங்களை ஏற்றுக்கொள்வீர்களாக. திரு பரமசாமி மிகவும் கண்ணியமானவர். சேவையை மிகவும் திறம்படச் செய்துள்ளார். நான் அவருடைய திறமையான சேவைகளைப் பாராட்டுகிறேன். உண்மையாகவே அவருடைய சேவைகளை நாம் இழந்துள்ளோம். யார், யார் அவருடன் தொடர்பாய் இருந்தார்களோ அவர்கள் எல்லோரும் அவருடைய பணிகளை இழந்துள்ளனர். அவர் மிகவும் நல்லவர். அன்புள்ளவர், உங்களுடைய இந்த விலாசம் கூட, எனக்கு நேற்றுத்தான் தேடிப்பிடிக்க முடிந்தது. மீண்டும் எனது ஆழ்ந்த அனுதாபச் செய்தியை உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மனக்கவலையுடன் தெரியப்படுத்துகிறேன்.

கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்லை
1985-06-25.

உண்மையுள்ள,
E. L. விஜயமான
பிரதம கணக்காளர்
(கல்வி அமைச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி / முல்லைத்தீவு பிரதேச கல்விப் பணிப்பாளர்

## ஜனாப் எம். எம். மன்சூர் அவர்கள் வழங்கிய

# இரங்கல் உரை

## கடமையுணர்வுடன்கூடிய பணியால் உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொண்டவர்

எமது கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் முதன்முதலாக கணக்காளர் பதவியை வகித்த திரு கே. கே. பரமசாமி அவர்கள் திடீரென அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து யாம் அதிர்ச்சி அடைந்தோம். எனது உள்ளார்ந்த அனுதாபத்தை மூதற்கண் அவரது குடும்பத்தார்க்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் எழுதுநராகச் சேர்ந்து, பிரதம எழுதுநராகி திறமையால் கணக்காளரானவர், அமரர் பரமசாமி அவர்கள். இவரது பல்பக்க ஆற்றல் எமது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சிக் கல்வித் திணைக்கள நிர்வாக கணக்கு விடயங்களில் பெரிதும் உறுதுணை அளித்தது.

ஆசிரிய திணைக்கள கொடுப்பனவுக் கிளை அரச ஸ்தாபன விதிவிதிக்கு அமைய நுட்பமாகவும், நேர்மையாகவும், செய்துவந்த அதேவேளையில் ஆசிரியர்களின் அவ்வப்போதைய தேவை அறிந்து பணியாற்றினார். இவரது அமைதியான சாந்தமான உள்ளம் எதனையும் வெளிப்படுத்தாது இருந்து கடின உழைப்பால் ஓய்வெடுத்தது போலும்.

உள்ளத்தனைய உயர்வு கண்ட அவரது திறமையை ஈற்றில் நாம் நீண்டகாலம் பயன்படுத்த முடியாது போய்விட்டது எமக்கு வேதனையளிப்பதாகும், நிர்வாகப் பொறுப்புக்கும், கடமைக்கும் இரண்டு கல்வித்திணைக்களங்களாகிய கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இறுதிவரை என்னுடன் உறுதுணையாக உதவி வந்தார். அத்தகைய உத்தமனின் ஆத்மா சாந்தியடைய உளமார வேண்டுகின்றேன்.

கல்வித்திணைக்களம்
கிளிநொச்சி,
1985-07-02.

ஜனாப் எம். எம் மன்சூர்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
முல்லைத்தீவு - கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் மாவட்ட பிரதேச கல்விப் பணிப்பாளர்**
**திரு. ம. சிமியாம்பிள்ளை அவர்கள் வழங்கிய**

# நினைவுரை

அமரர் கந்தையா பரமசாமி அவர்களைப் பல்லாண்டுகளாக நான் அறிவேன். பல ஆண்டுகளுக்கு முன்பு வடமாநில கல்வித் திணைக்களத்தில் நான் கல்வியதிகாரியாகப் பணியாற்றிய சமயம் அவர் ஓர் எழுதுனராக அதே அலுவலகத்தில் பணியாற்றினார். அப்பொழுது அன்னாரின் செயற்றிறனை அறியும் அரியவாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அமரர் செய்வன திருந்தச் செயபவர் ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவர். கடமையே பெரிதெனப் போற்றுபவர், கடின உழைப்பாளி செய்யும் தொழிலையே தெய்வமாகக் கொண்டவர், மிகவும் கண்டிப்பான ஓர் அரசாங்க உத்தியோகத்தராக அவர் விளங்கிய போதிலும் தம் சக ஊழியர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை எடுத்துக்கூறி, வழி நடத்தி அவர்களை அனுசரித்து நடக்கும் அரிய பண்பினைக் கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி பெரியோர், சிறியோர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், மேலதிகாரி, கீழுத்தியோகத்தர் என்று பேதம் பாராட்டாது அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்பினர் இமோராயினும் தாழ உரைப்பவர். எக்காரணம் கொண்டும் எவரது மனத்தையும் நோகச் செய்யாத அரிய குணம் படைத்தவர்

நான் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்ற பொழுது அமரர் பரமசாமி அவர்கள் இக் கல்வித் திணைக்களத்தில் பிரதம எழுதுனராகச் சேவையாற்றிக் கொண்டிருந்தார். அன்னாரின் திறமையை நன்கு பயன்படுத்தும் வண்ணம் அமரரைப் பதவிநிலை உதவியாளராகவும், நிதியுதவியாளராகவும் அடுத்தடுத்து நியமித்து அவரின் தனி சிறந்த சேவை எம் மக்களுக்குக் கிடைக்க வழி செய்தேன்

தமது விடாமுயற்சியாலும் கடும் உழைப்பினாலும் கணக்காளராகப் பதவியுயர்வு பெற்று, எம திணைக்களத்தை விட்டு நீங்கி கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு பிரதேசக் கல்வித் திணைக்களங்களுக்கும் பொறுப்பான கணக்காளராக நியமனம் பெற்றுச் சென்றார் அங்கும் அமரர் தமது திறமையாலும் தனிப்பண்பாலும் தமது மேலதிகாரிகளினதும் சக உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர் சமுதாயத்தினதும் பொதுமக்களினதும் அன்பையும் பாராட்டையும் பெற்ற ஓர் தனி சிறந்த அரசாங்க உத்தியோகத்தராகத் திகழ்ந்தாரென அறிகின்றேன்.

அமரர் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த அரச உத்தியோகத்தராக மட்டுமன்றி, ஒரு சிறந்த குடும்பத் தலைவனாகவும், தந்தையாகவும் சமூகத் தொண்டனாகவும் விளங்கினார். அவர் திடீரென விண்ணுலகேகிய மையால் அரசும் நாடும் ஒரு தனிசிறந்த அரச உத்தியோகத்தனை இழந்துவிட்டன அன்னாரின் மறைவு தமிழினத்துக்கும் அமரரது குடும்பத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்
1985-6-26.

ம. சிமியாம்பிள்ளை
கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**கந்தையா மீனாட்சி**

- சரஸ்வதி
- இராசம்மா
- விசாலாட்சி
- பரமசாமி
- பரஞ்சோதி
- தருமலிங்கம்
- கோமளம்
- நல்லம்மா
- தங்கமணி

**அரியகுட்டி சரஸ்வதி**

- நவரத்தினம்
- அரியரத்தினம்
- தங்கரத்தினம் (அரியமலர்)
- சுகிர்தமலர்
- சுப்பிரமணியம்
- கோடீஸ்வரன்
- சண்முகசுந்தரம்

பரமசாமி — சுகிர்தமலர்

- வசந்தகுமாரி
- கமலகுமாரி
- விஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org